# உண்மை என்றும் உயிர்பெறும்

கவிதைகள்



## கனகசூரியம் யோகானந்தன்

மணிமேகலைப் பிரசுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MRS. A.KUGANESVARALINGAM
NO 72
2ND LANE
ANANTHAPURI
TRINCOMALEE ( )

# உண்மை என்றும் உயிர்பெறும்


(கவிதைகள்)

கனகசூரியம் யோகானந்தன்

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எண் 4), தணிகாசலம் சாலை
தியாகராய நகர், சென்னை – 600 017
தொலைபேசி : 24342925
தொலைநகல் : 0091-44-24346082

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மணிமேகலைப் பிரசுரம்**
தபால் பெட்டி எண் : 1447,
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926
தொலைநகல் : 0091-44-24346082
மின் அஞ்சல் : manimekalai@eth.net
இணைய தளம் : www.tamilvanan.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | * | உண்மை என்றும் உயிர்பெறும் |
| ஆசிரியர் | * | கனகசூரியம் யோகானந்தன் |
| மொழி | * | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | * | 2005 |
| பதிப்பு விவரம் | * | முதல் பதிப்பு |
| உரிமை | * | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | * | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | * | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | * | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | * | xii + 100 = 112 |
| அட்டைப்பட ஓவியம் | * | ஐஸ் கிராஃபிக்ஸ் |
| லேசர் வடிவமைப்பு | * | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் ✆ 23725639 |
| அச்சிட்டோர் | * | ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | * | தையல் |
| வெளியிட்டோர் | * | மணிமேகலைப் பிரசுரம் சென்னை - 17. |

**விலை : ரூ. 30.00**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்களோடு...

என்னைக் கவிதை எழுதத் தூண்டியது நான் பிறந்து இன்று வரை நேசித்துக் கொண்டிருக்கும் சம்பூர் கிராமம். அங்கே பச்சைப் புல் வெளிகளும், குமுறும் கடலோசைக்கும் குறைவு கிடையாது. எங்கள் ஊர் கலைகள் மலிந்த உறவுகளைக் கொண்டது. நான் இளம் பராயத்தை அடைந்த காலத்தில் கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைகளைக் கேட்டு ரசித்து என்னுள்ளே மகிழ்ந்திருக்கிறேன். அக் கவிதைகளின் மூச்சையும், அவற்றின் வீச்சையும் கண்டு குதூகலித்திருக்கிறேன். கவிதை அரங்குகள் எமது ஊரில் அடிக்கடி இடம்பெறுவதுண்டு. அவ் வேளைகளில் முன்னால் அமர்ந்து இரவு கழிவது தெரியாமல் விழித்திருக்கிறேன்.

கவிதைகளை ரசிக்கத் தொடங்கிய நான் பல கவிதைகளை வாசித்திருக்கிறேன். இவை தான் இன்றைய கிறுக்கல்களுக்குக் காரணமும், வடிகாலும் எனலாம். தொழில் நிமித்தம் காரணமாக எனக்கு மலையகத்தில் வாழும் வாய்ப்புக் கிடைத்தது. அக் காலத்தை இன்றும் கூட நினைவில் நிறுத்திப் பார்க்கிறேன். கொட்டும் மழை வேளையிலும், குளிர்ந்து வரும் தென்றலிலும் என் மனதைப் பறிகொடுத்து வார்த்தைகளைத் தேடியபடியே தேயிலைப் பயிர்களிடையே நடந்து சென்றிருக்கிறேன். அகப்பட்ட வார்த்தைகளை அப்படியே கவிதையாக்கி அழகு பார்த்திருக்கிறேன். கவிதைகளால் வரம்பு கட்டிய விடயங்களை மன நிறைவிற்காக அடிக்கடி நண்பர்களோடு பேசிக்கொள்வேன். தமிழகக் கவிஞர்களின் கலைப் படைப்புகளிலே ஒன்றித்துப் போயிருக்கிறேன். இவையன்றி கவிஞர் புதுவை இரத்தினதுரையின் சமகால காவியங்களை என்னையறியாமல் முணுமுணுத்திருக்கிறேன். இவைதான் என்னைப் பாதித்தன, இவைதான் என்னைக் கவிதை எழுதத் தூண்டின எனலாம்.

என் தாய் இறந்தபோது கவிதை வரிகளைத் தேடி அலைந்திருக்கிறேன். என்னுள்ளே ஏற்பட்ட காயங்களும் மாறா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடுக்களுமே இக் கவிதைகளைப் பிரசவிக்க உதவின. எனது குரு நாதரும், அதிபருமான அமரர். செல்லக்குட்டி அவர்கள் நான் கவிதைகளை எழுதி ஆலோசனை கேட்கும் போதெல்லாம் நல்லன சொல்லி என்னை ஊக்குவித்தார். திருகோணமலை சண்முக இந்து மகளிர் கல்லூரியில் நீண்ட காலமாக ஆசிரியப் பணியை மேற் கொண்ட காலத்திலே என்னுள்ளே உதித்த உணர்வுகளை இசைப்பாக்களாகவும், கவிதையாகவும் வடித்துள்ளேன். திருகோணமலை "வலயக் கீதம்" இயற்றக் கிடைத்த வாய்ப்பினைப் பெரும் பாக்கியமாக இன்று வரை கருதுகிறேன். பல கவியரங்குகளில் பங்குபற்றி கவி பாடியிருக்கிறேன். இவைதான் மனதிற்கு நிறைவைத் தந்து கொண்டிருக்கின்றன.

வாடிய பயிருக்கு வான் மழை கிடைத்தது போல மணிமேகலைப் பிரசுர இயக்குனர் ரவி தமிழ்வாணனின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. இது கனகசபை தேவகடாட்சம் .மூலமாகக் கிடைத்தது. அவரைக் கொண்டே என்னை அறிமுகம் செய்ய வைத்தேன். வேலைப் பளுவின் மத்தியில் அவர் என்னை அறிமுகம் செய்து தந்தார். எங்களின் பெருமதிப்பிற்குரிய கேணிப்பித்தன் திரு. ச. அருளானந்தம் அவர்களிடம் அணிந்துரை கேட்டேன். மனமுவந்தேற்று எனக்கு உரிய காலத்தில் அழகுபட அணிந்துரை தந்தார். இவர்கள் அனைவரும் என்னால் மறக்கப்படாதவர்கள், என் நன்றிக்குரியவர்கள்.

எனது கவிதைகள் வாசகர்களால் இனங்காணப்பட்டு குறை, நிறைகள் வரும்போது அதனையும் மனமுவந்து ஏற்றுக் கொள்வேன். "உண்மை என்றும் உயிர் பெறும்" என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கையுண்டு.

"வாழ்க தமிழ்"

**திரு. கனக. யோகானந்தன்**
இல : 101/8, கந்தசாமி கோவில் வீதி,
திருகோணமலை, இலங்கை.
தொலைபேசி : 026 - 2221807

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

திரு. கனகசூரியம் யோகானந்தன் அவர்களை நல்லாசிரியராகக் கண்டிருக்கிறேன். சிறந்த அதிபராகப் பாடசாலையை முகாமையூடாக வழிநடத்திச் செல்வதை நேரில் பார்த்திருக்கிறேன். ஒலிபெருக்கியைக் கையிலேந்தி நிகழ்ச்சிகளைத் தொகுத்து ரசிகர்களை ஈர்த்து அறிவிப்பாளராக அற்புதங்களைப் படைப்பதனையும் கேட்டிருக்கிறேன். நீண்ட காலமாகத் தமிழை நேசித்து மாணவர்களுக்குத் தமிழார்வத்தை ஊட்டுவிப்பதையும் உணர்ந்திருக்கிறேன். இவ்வாறு நல்லாசிரியராக, சிறந்த அதிபராக, நேர்முக வர்ணனையாளராக, பழகுவதற்கு இனிய சுபாவம் கொண்டவராகத் திகழும் திரு. யோகானந்தனது செயற்திறன்களை எல்லாம் ஒருபுறம் வைத்து விட்டு, அவரது கவித்துவத்தை அலசிப்பார்க்கும் போது பிரமித்து விடுகிறோம். இந்தக் கவித்துவம் எப்படி இவரை ஆக்கிரமித்துக் கொண்டது.?

திருகோணமலை மாவட்டம் திரைகடல் ஓதும். நித்திலம் கொழிக்கும் தெவிட்டாத பூமி. இராவணனைச் சாமகீதம் பாடவைத்து அவனது இசைத்திறத்தை வெளிக்காட்டி கோணேசப் பெருமான் குடிகொண்ட புண்ணிய பூமி. இம்மாவட்டத்தின் சிற்றூர்கள் தேன்தமிழ் இசைப்பன. இடறி விழும் இடமெல்லாம் இன்தமிழ்க் கவிதை துளிர்க்கும். கடலும், வயலும், காடும் இசைபாடும். கொள்ளை அழகு கொட்டிக் கிடக்கும் அற்புதப் பிரதேசம். அழகிய கிராமம் எப்படி இருக்கும்? திரு. யோகானந்தன் அவர்களது மொழியில் கூறுவதாயின்

'பச்சை வயல் வெளிகள்
பாவிசைக்கும் பசுங்கிளிகள்
இச்சை கொள்ளும் வில்லேரி
சுற்றி ஓடும் கடலலைகள்.
இதயமெல்லாம்
பச்சை குத்திக் கொள்ளும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தென்னைகள் தலையசைக்கும்
பூவரசம் வேலியிலே
புல்லாங்குழல் இசை பிறக்கும்
கயல் மீன்கள் துள்ளி யெழும்
சின்னத் தெருக்க ளெல்லாம்
பள்ளி விட்ட சிறார்கள்.'

என்று கூறலாம். இது அவர் எழுதிய 'வாழ்ந்த மலர்கள்' எனும் கவிதையில் தான் பிறந்த சம்பூர் கிராமத்தின் எழில் பற்றிக் கூறிய கூற்றாகும். ஒரு மனிதனின் ஆளுமை அவனது மரபணுக்களாலும், வாழும் சூழலினாலும், மொழியின் செழுமையினாலும், கல்வியினாலும் கட்டியெழுப்பப் படுகிறது. இவற்றுள் சூழல் பெரும் பங்காற்றுகிறது. கிராமங்கள் இயற்கை வனப்போடு திகழ்வதால் உள்ளங்களில் இடம்பிடித்துக் கொள்கின்றன. உணர்வுகளைத் தொட்டுக் கிளர்ச்சியை ஊட்டி விடுகின்றன. அந்தக் கிளர்ச்சியோடு கற்பனைத் திறனும் சேரும்போது அழகிய கோலங்கள் பிறக்கின்றன. அவற்றுள் ஒன்றாகக் கவிதையும் விளங்குகிறது. சம்பூர் அழகியதொரு கிராமம். எனது 'உல்லாசப் பயணம்' எனும் சிறுவர் நாவல் சம்பூரின் பெருமையைப் பறைசாற்றுகிறது. சம்பூர் கற்றாரையும் மிக்காரையும் பெற்றெடுத்த கிராமம். திரு. யோகானந்தன் சம்பூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதால் கவிதையின் ஆக்கிரமிப்புக்குள் ஆட்படுத்தப் பட்டுள்ளார்.

ஏது கவிதை? கவிதை என்பது என்ன? இது தான் கவிதை என்று எதனை வரையறையாகக் கொண்டு தீர்மானிக்கின்றோம். கவிதை வெறும் சொல்லலங்காரம் அல்லது வார்த்தை ஜாலம் அல்ல. கவிதை உள்ளத்தின் உயரிய உணர்ச்சியின் பிரதிபலிப்பு. சொற்களைத் தெரிந்து உணர்ச்சியை உருக்கொடுத்து கவிதை பிறக்கிறது. அதன் வடிவம் பல்வேறு படலாம். சங்ககாலத்தில் அகவல் தேவைப்பட்டது. அதுவே பின்னர் வெண்பாவாகப் பரிணமித்தது. தொடர்ந்து விருத்தம். இப்படிப் பல்வேறு உருவங்களில் கவிதை உலா வந்தது. இன்றைய புதுக்கவிதைகள் பல, சங்ககாலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களை நினைவுபடுத்துவன. புதுக்கவிதைகள் யாவும் அந்த வகையில்தான் என்று சொல்ல வரவில்லை. சில குறிதவறாமல் தாக்கும் வல்வில் ஓரியன் அம்புகள் போன்றன. நவீன காலத்துச் சுடுகலன்கள் போன்றன. சொல்ல வந்ததை இரண்டொரு வரிகளில் சொல்லவல்லன. அந்த வகையில் திரு. யோகானந்தனின் கவிதை புடம் போடப்பட்டுள்ளது. யோகானந்தன் மரபுக் கவிதைகள் எழுத வல்லவர். மேடைகளில் கவிதைகளில் கலந்து கொண்டு கணீர்க் குரலால் கவிதை பாடும் போது கேட்போர் கிறங்கி விடும் வகையில் அற்புதமாகப் பாடுவார். எது நமது மனதைத் தொட்டு உலுக்கி விடுகிறதோ அது கவிதையல்லவா?

சமுதாயக் கட்டமைப்பில் தெரிந்தோ தெரியாமலோ பிசகுகள் தோன்றுவது வழக்கம். அதே போல் நல்லனவும் நிகழும். அவற்றைக் கண்டு தரமறிந்து ஏற்பதும், தவிர்ப்பதும் அவரவர் இயல்புக்கேற்ப நிகழும். தினமும் நம்மை சந்திக்கும் நிகழ்வுகள் எத்தனை? கணக்கில் வைக்கின்றோமோ? அவற்றுள் சில நமது உள்ளத்தை உலுக்கி விடுகின்றன. பெரிய தாக்கத்தை உண்டாக்கி விடுகின்றன. அந்தத் தாக்கத்துக்கு வடிகாலமைத்து உருக்கொடுத்து வெளிக் கொண்டு வரும் போது பெரியதொரு படைப்பாகி விடுகிறது. அதனை நோக்கும் நமக்கும் பிறருக்கும் பல்வேறு சிந்தனைகளை ஏற்படுத்தி விடுகிறது. இங்குதான் மொழியின் விளையாட்டு அல்லது பயன்பாடு தெரிகிறது. உணர்ச்சியும் மொழியும் சேரும்போது உன்னதமான உருவம் அல்லது வடிவம் உருவாகிறது.

கொடுமைகளைக் கண்டு கொதித்தெழும் உணர்ச்சிப் பிழம்புகளாகக் கவிதைகள் வெளிவருவதைக் காணுகின்றோம். தான் பிறந்து தவழ்ந்து வாழ்ந்த சிற்றூரில் வாழ முடியாத நிலை தோன்றி ஊரை விட்டு ஓடி உயிர் வாழும் நிலையை எண்ணி வாடாத உள்ளங்கள் இல்லை. கவிஞன் யோகானந்தனிடமும் அந்தக் கொதிப்பைக் காணுகின்றோம். 'மீண்டும் எம்மூரில் உரிமையோடு வாழவே சூரிய உதயத்தைத் தேடுகின்றோம். கொடிய இரவுகள் வெளிச்சத்தைத் தேடுகின்றன. விடிவு வரும் நாளை' எனக்கூறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞனின் இதயக் குமுறல் பாதிக்கப்பட்ட சகல தரத்தினர்களது குரலாகவே உள்ளது.

ஆழிப்பேரலைகளை அள்ளி வீசிய கடலைப் பாடாதோர் யார்? ஆனந்தத்தைத் தந்த அதே கடல் ஆர்ப்பரித்து உயிர் பறித்த செயலை என்னவென்பது?

'அலையோசை இசை வடிவம்.
இன்னிசை தந்த கடலே,
அப்பாவி மக்களின்
கண்ணீர்த் துளிகளை
உப்பு நீரோடு
ஏன் கரைத்துக் கொண்டாய்?
மனித உடலங்களையும்
அள்ளிக் குவித்தது ஏனோ?'

உள்ளக்குமுறலின் உயிர்த் துடிப்பு. வரிவடிவில் தளிர் விடுகிறது. 'மனிதனே சிந்தித்துக் கொள்..' என்ற தலைப்பில் பல சிந்தனைத் துளிகளை அள்ளி வீசியுள்ளார்.

'வாழ்க்கையின் பலம்
நம்பிக்கை தானே
சந்தோசம் என்பது
தோண்டி எடுப்பதல்ல
உருவாக்கிக் கொள்வது.

இழந்ததை நினைத்து
இருப்பதைக் கெடுத்து விடாதே.
உன் இதயத்துள் நடக்கும்
மௌனப் போராட்டத்தை
அடிக்கடி கலைத்துக் கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.............................................
வாழ்வின் துன்பமே
வாழ்வை இனிக்க வைக்கும்.'

வாழும் சமுதாயப் பிரச்சினைகளைக் கண்டு உள்ளம் பொங்கி அவற்றைக் கோடிட்டுக் காட்டுந்திறன் யோகானந்தனிடம் உண்டு. உணர்வுவழி நின்று உள்ளதை உள்ளபடி கூறுவோருக்கு உலகில் கிடைக்கும் பரிசுகள் உயிர்ப் பறிப்புகள் என்பது உலகறிந்த விடயம். நாம் வாழுகின்ற யுகம் எப்படி பட்டது? தவித்த முயலடிக்கும் சகாப்தமல்லவா? அமைதியைக் கலைத்து 'கத்திகளும் பொல்லுகளும்' 'மண்டையைப் பிளக்கும்' 'ஒரு மௌனக் கலப்பில்' 'மனிதம் அறுக்கப்படுகின்ற' காலம் அல்லவா? 'படுத்துறங்கப் பாயுமில்லை, பால்வாங்க வழியுமில்லை, பொம்பர்ச் சத்தத்தைக் கேட்டபடி கண்ணுறங்கு..' எனக் கவிஞர் தாலாட்டில் குறிப்பிடும் காலம், சற்று ஓய்ந்துள்ள இன்றைய நிலையில் பேரினவாதச் சக்திகளின் கழுகுப் பிடியினால் தமிழர் தாயகம் சந்திக்கும் சவால்கள் அனந்தம். 'நிசப்த அக்கினியில்..' என்ற கவிதையில்

'அகிம்சைக்கு இப்பொழுது
நெருப்பு மூட்டப்பட்டுள்ளது.

போதி மாதவனும்
..............................
இராணுவ அரணுக்குள்
பாதுகாப்புத் தேடி
பாதி முகந் தெரிய

..........................
அமர்க் களமாய் திருமலை
அரங்கேறிக் கொண்டிருக்கிறது.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சமகால நடப்பு காட்டப்படுகிறது. மீண்டும் போர் தொடங்கினால்...? கவிதை பயமூட்டுகிறது.

'குருதியில் நனைந்து உயிர் பறித்து
யுத்த வடுக்களைச் சுமந்து வரும்'

'வானூர்திகள்...

'உயிரில்லா உடலங்களை
பூமி யெங்கும் தூவி நிற்கும்'

'ஒப்பாரிகளும் கதறல்களும் ஒலித்தே நிற்கும்' எனக் காட்டுகிறார். அந்த நிலை தூரத்தே எட்டி நிற்கிறது. வருமா? வராதா? சொல்லமுடியாத சூனிய நிலை. வரக்கூடாதென்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

திரு. யோகானந்தனிடம் பல திறமைகள் நிரம்பியுள்ளன. அந்தத் திறமைகளை அவர் வெளிக்கொண்டு வந்து தனது ஆளுமையை நிலைநிறுத்த வேண்டும். நமது சமுதாய அமைப்பில் எழுதுவதும், அவற்றை வெளிக்கொண்டு வருவதும் பெரும் சிரமம். புத்தகம் வெளியிடுவதால் பணம் தாராளமாய் சேருகிறது என நமது மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பணம் கொடுத்து வாங்கிப் படித்து உற்சாகமூட்டுவோர் அருகிக் கொண்டு வருகிறார்கள். இந்த நிலையில் செலவழியும் நிதி மீண்டும் நமது கைக்கு வருமா என்பது சந்தேகம். ஆனாலும் நமக்குக் கிடைப்பது ஆத்ம திருப்தி மட்டுமே. அந்த வகையில் தொடர்ந்து எழுதி ஆளுமையை நிலைநிறுத்த வேண்டியது திரு. யோகானந்தனின் கடமையாகிறது. நல்ல கவிதைகளை உள்ளடக்கிய இந்நூலைப் படித்து அணிந்துரை தரும்படி கேட்டுக்கொண்ட கவிஞர் யோகானந்தன் நன்றிக்குரியவர். அவரது முயற்சி தொடர வாழ்த்துகிறேன்.

**ச. அருளானந்தம்**
(கேணிப்பித்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


1. உண்மை என்றும் உயிர்பெறும் ........ 1
2. விசாரித்துக்கொண்டிருக்கிறேன் ........ 5
3. முகவரி இல்லாதவர்களோடு ........ 7
4. சமாதானம் ........ 10
5. நீதான் மகாகவி ........ 11
6. நவீன தாலாட்டு ........ 12
7. இரவும் பகலும் ........ 14
8. மே தினம் ........ 16
9. மீண்டும் போர் தொடங்கினால் ........ 18
10. கருவான போர் மேகம் ........ 20
11. அன்பின் அம்மாவிற்கு ........ 21
12. பெண்ணே உன் வாழ்வு ........ 22
13. தேர்தல் வாக்கு(கள்) ........ 24
14. சத்திய புருஷனின் மனைவி நீ ........ 25
15. சமுதாயம் மறுமலர்ச்சியான போது ........ 31
16. வானவில்லின் ஜாலத்திலே ........ 34
17. அன்றைய நாளும் இன்றைய பொழுதும் ........ 35
18. உலகை உய்விக்கும் உத்தமரே ஆசிரியர் ........ 36
19. சமுதாய மறுமலர்ச்சி காண்போம் ........ 38
20. புதுமைப் பெண்ணே! புறப்படு... ........ 40
21. காற்றாக வருவேன்.. ........ 42
22. இனிய தமிழே... ........ 46
23. கருக்கொண்ட போர்மேகம் ........ 48
24. நவீன தாலாட்டு ........ 49
25. வேறென்ன வேண்டும் ........ 51
26. அவசரத் தாலாட்டு ........ 52


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. நெஞ்சொடு புலம்பல் .................................... 54
28. உறவுப் பாலமமைத்து .................................... 56
29. ஊருக்கு மட்டும் சொல்வதற்கு .................................... 58
30. இன்றைய அரசியல் .................................... 60
31. கனவுகள் யாவும் பழங்கதையாய் .................................... 62
32. உணர்வுகளெல்லாம் அழிகிறது .................................... 64
33. நீ சொர்க்கத்தில் இருக்கிறாய் .................................... 65
34. ஆணாதிக்கக் கணைகளினால்... .................................... 67
35. அமைதிக்காலம் .................................... 69
36. கவிதையானது .................................... 71
37. என் இதயச் சாம்ராஜ்ஜியத்தில் .................................... 72
38. நிசப்த அக்கினியில் .................................... 74
39. அதிகாரம் .................................... 76
40. புள்ளியில் புதைந்த உறவு .................................... 78
41. சம படைப்பு .................................... 80
42. இன்னுமொரு உறவுக்காய் .................................... 82
43. கடலே நீயேன்... .................................... 84
44. மனிதனே சிந்தித்துக் கொள் .................................... 86
45. மானுட இயந்திரங்கள் .................................... 88
46. மரம் கொத்தியொன்று .................................... 89
47. வாழ்ந்த மலர்கள் .................................... 91
48. அவசரயுகம் .................................... 93
49. நீதி தேவதையே மௌனமேன் .................................... 94
50. அவன் ஏழைச் சிறுவன் .................................... 96
51. தீராத எண்ணங்கள் .................................... 98
52. நெருப்புச் சீதைகள் .................................... 99
53. பெண்கள் உதிர்ந்து போன சருகுகளாய் .................................... 100


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை என்றும் உயிர்பெறும்

(கவிதைகள்)

## உண்மை என்றும் உயிர் பெறும்

சமயத் தலைவர்களே
அரசியல் ஞானிகளே
இலங்கைத் திருநாட்டின் செல்வங்களே
உங்களை...
மண்டியிட்டு மன்றாடுகின்றோம்
உண்மைகளை மட்டும்
தேசத்தின் கல்லறைகளில்
புதைத்து விடாதீர்கள்.



*

பூமித் தாயும்
அவள் ஈன்ற குழந்தைகளும்
கூட்டிலே சிறகிழந்து கிடக்கிறார்கள்
உண்மைகள் ஊமையாகிவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியத்தைப் பேசியவர்கள்
வாயில் எல்லாம்
வேட்டுகளால் திறக்கப்படாத
மௌனப் பூட்டுகள்...
கால தேவனே இவர்களது
வாய்க்கட்டை முடிந்தால்
அவிழ்த்துவிடு
காரணம்
இனிமேலாவது அவர்கள்
உண்மைகளைப் பேசட்டும்
உண்மைகளை மட்டும்
தேசத்தின் கல்லறைகளில்
புதைத்து விடாதீர்கள்.

*

நாட்டில் உண்மை பிறந்தபோது
காந்தியும், புத்தனும் பிறந்தார்கள்
நீ சாகும்வரை உன்னோடு
இருப்பேன்; தலைவிதி
என்றார்கள்.
நாம் செத்தபிறகு நீ எங்கே
போவாயோ எமக்குத் தெரியாது
என்று கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் செத்தால் எனக்கு விடுதலை
உண்மை கூறி
ஏளனஞ் செய்தது.
உண்மைகளை மட்டும்
கல்லறைகளிலே புதைத்து விடாதீர்கள்.

*

ஆழமாக இன்னும் ஆழமாக
காலத்தின் அடியிலிருந்து...
காத்திருக்கிறேன்
நான் வாழ்ந்த காலத்தில்
சந்திரனில் முதல் மனிதன்
தடம் பதித்தான்...
சுற்றுகின்ற அண்ட வெளியில்
தொடங்கிய உண்மையில்
நானும் மகிழ்ந்திருந்தேன்.
இன்று வேடிக்கை
மனிதர்கள் -
அது நடக்கவில்லை
பொய் யென்கிறார்கள்
உண்மைகளை மட்டும்
கல்லறைகளிலே புதைத்து விடாதீர்கள்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பலோட்டினோம்
கடாரம் வரை வென்றோம்
கல்லேற்றினோம்
அகிலம் வாழ
வீரப் பரம்பரைகள் நாங்கள்
என்று
பெருமிதம் கொண்ட போது
அது நடக்காதது போல்
வெற்றிகளையும்
எமது வீரத்தையும்
விளையாட்டுத் தனம்
எனச் சொல்லி
கொச்சைப்படுத்துகிறார்
ஆனால்
உண்மைகளை மட்டும்
கல்லறைகளிலே புதைத்து விடாதீர்கள்.

*

குரோதப் பார்வைகள்
இனவெறிகள் -
யுத்தப் பெருக்கில்
எல்லாம் சிதைந்து
அழிவுச் சுழியில்
உயிர்கள்தான் எங்கே
புதிய உலகைக் காண?
உண்மைகளை மட்டும்
கல்லறைகளிலே புதைத்து விடாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரித்துக்கொண்டிருக்கிறேன்...

அது -
அழகான மாலைப்பொழுது
வீதியெல்லாம் ஒளிவெள்ளம்
நாற்புறமும் உள்ள
தாமரை மலர்கள்
தலை குனிகின்றன
சூரியன் பயந்து
ஓடிக் கொண்டிருக்கிறான்
அவளது -
அழகிய ஊர்வலத்தில்
அந்திப் பொழுதே
மறைந்து கொண்டிருந்தது.

*

ஏக்கத்தோடிருந்த கண்கள்
திடீரென...
உசார் அடைகின்றன
இதயவறைகளைக் கையில்
இறுக்கிப் பிடித்தபடி
ஒதுங்கி நின்றவளை
பாலைவனப் பார்வை
பார்க்கிறேன்...

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணொடிக்கும் போது
எனது பார்வைபட்டு
அவள் சுடப்பட்டிருக்க
வேண்டும்
இல்லையேல்...
விழப்பட்டிருக்க வேண்டும்

*

தாக்குதல் தொடுத்த
எனக்கு
தாக்குதலை என்னால்
தாங்க முடியவில்லை
காரணம்
அவளோடு வந்திருப்பவன்
என் பாலிய நண்பன்
அன்று தொடக்கம் தான்
விசாரித்துக் கொண்டிருக்கிறேன்
அவளுடைய
திருமணத்தை!

*

தயவு செய்து
அவள் சென்ற வீதியை
யாருமே செல்லாது
தடை செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் -
அவளுடைய பாதையிலே
பலபெண்கள்
தட்டுப்பட்டு விழுந்துவிடுவார்கள்.
எழமுடியாமல்...

# முகவரி இல்லாதவர்களோடு...

அன்பே
என்னைச் சந்தித்த நாட்களில்
உன் இதயக் கதவினை
எனக்காகக்
கொஞ்சமேனும்
நீ திறந்து காட்டியிருந்தால்
பனிபடர்ந்த நாட்டிலிருந்து
உன்னை விசாரிக்க
நேரம் இருந்திருக்காது.

*

எப்பொழுதும்
என்னுடைய எண்ணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுடைய நினைவுகளோடு
பின்னப்பட்டிருந்திருக்கும்
நான் நடந்து நடந்து
தேய்ந்து போன
வீதிகளிலெல்லாம்
யாரோவெல்லாம்
பயணித்துக் கொண்டு
உரிமை கோருகிறார்கள்
நான் மட்டும்
பார்வையாளனாகவே இருக்கிறேன்.

*

முகவரி இல்லாதவர்களோடு
நீயோ...
முகம் கொடுத்துப் புன்னகைக்கிறாய்
உன் புன்னகையின்
சொந்தக்காரன்
விழியிருந்தும்
குருடனாய்
இதயத்திலே ரணங்களைச்
சுமந்து
கொண்டிருக்கிறேன்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்காக
நீயோ...
ஒரு கணமும்
புன்னகை சிந்தியது இல்லை.
உறக்கமில்லாத
இரவுகளை மட்டும்தான்
உன்னால் பெறமுடிந்தது.
இரவுகள் தொடர்கதையாகி...
உன் நினைவுகளை
இரைமீட்டி மீண்டுபோகின்றன..
*

காதலோ புனிதமான விபத்து
சந்தர்ப்ப வசமானது
அந்தச் சுகமான
விபத்தில்
முகம் தெரியாமல் போனவர்களில்
நானும் ஒருவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம்



தேசியக் கொடியேற்றி
வெண்புறாக்கள்
பறந்து போனதால்
சமாதானம் - சமாதானம்
என்று
அடிக்கடி யாரும்
பேச வேண்டாம்
இலங்கைத் தீவில்
சமாதானம் என்னும்
சொல்லாவது
கொஞ்சக் காலம்
சமாதானமாய் இருக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதான் மகாகவி...



நிமிர்ந்த மலைகளையே
நினைவுக் கோபுரமாக்கி
நீளும் காலம் யாவும்
நீதான் மகாகவி என்று
தமிழினம் சொல்லும்
உன் நீண்ட தலைப்பாகையே
உன் உறுதி சொல்லும்
நீகண்ட புதுமைப் பெண்கள்
மரணத்தின் விளிம்பில்
புதுமை புரிகிறார்கள்
தேசத் தீயை எவருமே
அழித்து முடிப்பதில்லை
எட்டயபுரம் சொல்லிய பாடம்
எங்கள் உள்ளத்தின் தீயாய்
எரிந்து கனக்கிறது...
உன் கவிதையின் நிழலே
இழந்துபோன...
ஈழத்தமிழினத்தின் வானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன தாலாட்டு...



காட்டுவழி பிறந்தவனே
கனகமணித் தேரழகே
அகதிமகன் ஆனவனே
அவசரமாய்க் கண்ணுறங்கு...

படுத்துறங்கப் பாயுமில்லை
பால்வாங்க வழியுமில்லை
பொம்பர்ச் சத்தத்தை(க்)
கேட்டபடி கண்ணுறங்கு...

உனை அணைத்துப் பாலூட்ட
உடலினிலே தெம்புமில்லை
அரை குறையாய் உணவு தந்து
அப்படியே தூங்க வைப்பேன்

குழந்தையில்லாத் தாய்மடிகள்
அவமானத்தில் துடிதுடிக்க,
முத்தாய்ப் - பவளமாய் - முழுநிலவாய்
இப்போதே நீயுறங்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையிலே காய்ச்சல் வந்து
மல்லிகையே நீ துடித்தால்
கரையாத எம்மனமும்
உருகிவிடும் கண்ணுறங்கு...



தாயாகக் காட்டுதற்கும்
தழுவி எடுப்பதற்கும்
மாற்றம் விரைவில் வரும்
கண்மணியே நீயுறங்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவும் - பகலும்



இரவை விரும்புவோர்
தனிமையில் உள்ளவர்கள்
மட்டுமல்ல,
போரை வெறுப்பவர்களும் கூட
மனிதர்கள் -
சூரிய ஒளிக்காலத்தில்
ஒரு விதமாகவும்
விளக்கொளியில்
ஒருவிதமாகவும்
நடைபயில்கிறார்கள்
இரவு என்றாலும் கூட
ஒளியும் - நிழலும்
இருக்கத்தான் செய்கின்றன.

பகலைவிட
இரவு மாத்திரமே
நேர்மையானது.
இலக்கியவாதிகளின்
பகல் நேர எழுத்துகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள் சூழ்ந்ததும்
பொன்னிற அடையாளம்
பெறுகின்றன -
இருண்ட சிறைகளில்
இருக்கை அறைகளில்
இருள் கவ்விக் கொள்ளும்
பகலில் வருவோர்க்கு
அவர்களின் சத்தத்திற்கு
இருள் -
ஒரு முகமூடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே தினம்



ஏழைத் தொழிலாளிகள்
முட்செடிகளாய் -
நசுக்கப் பட்ட வேளை
சிறுமலர் பூக்கும் நாள்.
வரண்டு போன
பாலைவன வாழ்வில்
ஆழவேர் செலுத்தும் நாள்.
செங்குருதிகளை
உறிஞ்சிக் கொள்ளும்
முதலாளி அட்டைகளுக்கு
ஒற்றுமை காட்டும்
புனித நன்னாள்.
சிக்காக்கோ...
இரத்த ஆறுகளை
நினைவுபடுத்தும் நாள்
தொழிலாளிகளின்
உணர்வுகள் -
காற்றாலும் - புழுதியாலும்
முரடாகிப் போன நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டாளிகள்
வலைகளற்ற சிலந்திகளாய்
தென்றல்(க்)
காற்றையும் - நிலவொளியையும்
கண்டுவிட்ட நாள்
கீழ்வர்க்கம் -
மேல்வர்க்கத்தைத்
துடைத்தெறியும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் போர் தொடங்கினால்...

சமாதானம் தேடி(ப்)
புறப்பட்ட தென்றல்
குருதியில் நனைந்து, உயிர் பறித்து
யுத்த வடுக்களைச் சுமந்துவரும்
குண்டுச் சத்தங்களும்
சுற்றி வளைப்புக்களும்
வசந்தகால வருடல்களை
நிசப்தமாக்கி விடும்.
மானுடங்களின் விழிகள்
அழுதழுது வீங்கிப் போகும்
யுத்தகால வானூர்திகள்
உயிரில்லா உடலங்களை
பூமியெங்கும் தூவி நிற்கும்.
அழகிய கடல், வயல்வெளிகள்
தமிழர் தேசமெங்கும்
சுடுகாட்டு அனல் வீசும்
குயில்களின் வாய்களிலும்
ஒப்பாரியும், கதறல்களும்
ஒலித்தே நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டான்களும், நரிகளும்
வானைப் பார்த்(து)
எக்காளமிடும்.

மரணத்தை வரவேற்கும்
தேச விழுதுகள்
ஆல விருட்சங்களாய்...
தியாகச் சுடர்களாய்...
எழுந்து நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவான போர் மேகம்...



கருவான வான் மேகங்கள்
தமக்குள் முட்டி மோதி
மண்ணிலே மழை தரவில்லை
போர்க்கால எறிகணைகள்
இரத்தப் புகை கக்கி
தெருவிலே மனிதவுடலங்கள்
பதை பதைத் தோடும் மானுடங்கள்
தலைகளற்ற இரத்தப் பிண்டங்கள்
இரக்கம் கொள்ளாத வஞ்சகர்கள்
தென்றல் தீண்டும் வீதிகள்
சொந்தம் கொள்ளா நிலை எமக்கு
கண்களிலிருந்து கண்ணீர் மழை சிந்தியும்
அமைதியாகத் துடைக்க
கையிலே விரல்கள் இல்லை
மனங்களிலே சமாதானக் கீற்றுகள்
தென்பட்டாலும் உணர்வு ரீதியாக
நம்பிக்கை நட்சத்திரங்கள்
இன்றுவரை தோன்றவில்லை
சமாதானத் தென்றலில் கூட
ரணங்களை ஏற்படுத்தும்
தீராத வெப்பங்கள்
பால் நிலாவில் பனிமழை பொழிய
மேகங்களே உதவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் அம்மாவிற்கு



அன்பின் அம்மாவிற்கு
உன் மகனை நினைத்துக்
கவலை கொள்ளாதே
ஒரு புரட்சிப் பயணத்திலே
என் கால்கள்..
பிரிக்க முடியாதவாறு
பதிந்து போய்விட்டன.

⁜

அந்தப் புண்ணிய பயணத்தில்
எனது பொன்னுடல்
எதிரிகளின் துப்பாக்கிகளின்
துப்பல்களுக்கு
இரையாகலாம்...

⁜

என்னை நினைத்துக்
கவலை கொள்ளும்
தம்பியிடம் சொல்
உன் அண்ணனின் உடல்
இனத்திற்காய்
சொந்தமாகிவிட்டது - என்று

⁜

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தால்
என் பயணத்திற்காய்
அவனையும் அனுப்பிவை

*

பல கனவுகளைச் சுமந்து
என்னை வளர்த்தவளே
என்னைக் கல்லறையில் அடைத்து
கண்ணீரைக் கரையவிடாதே

*

நான் சிந்தப் போகும்
குருதித் துளிகள்
புதிய சகத்திரத்திலே
அனைவரதும் சிந்தனைகளைக்
கிளறட்டும்.

## பெண்ணே உன் வாழ்வு...

பெண்ணே,
உன் வாழ்வோ
கடலைப் பார்ப்பவர்க்கு
அதன் ஆழத்தை
மட்டுமே...
உணர்த்திவிடுகின்றது
ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலின் ஆழத்திலே
புதைந்து போய்க் கிடப்பவற்றை
எவருமே
தேடிப் பெற முயற்சிப்பதில்லை.
⁑

உன் வாழ்வு
சின்னபின்னமாகி
கலைந்து போன நேரத்தில்
நீயோ...
கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தால்
கண்ணீர்
உந்தன் வாழ்க்கைக்கு
ஜீவனம் தந்திருக்காது
போயிருக்கலாம்
⁑

கனவில் கூட கண்டு தெரியாத
பாலைவனங்களை
நோக்கி நீ நகர்ந்திராவிட்டால்
நனைந்து...
கொண்டிருக்கும்
உன் வீட்டுக்கூரைகள்
ஓட்டைகளாகவே
இருந்திருக்கும்
மறுபிறவி வரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வாக்கு(கள்)

இலங்கைத் திருநாட்டில்
தேசியக் கொடிகள்
முழுக்கம்பத்தில் பறக்கிறது
ஆனால்
இலங்கை மக்கள்
வாழ்வோ
அரைக்கம்பத்திலே
ஊசலாடுகின்றது.



⁂

தேர்தல்கால
வாக்குறுதிகளுக்குள்
மக்கள்...
அமிழ்ந்து போகிறார்கள்
மக்களின் முதுகின் மேலே
அரசியல்வாதிகள்
அடிக்கடி...
சவாரி போகின்றார்கள்
கைதட்டி ஆர்ப்பரிக்கும்
வாக்காளர்களின்...
வயிறுகளிலோ
பசிப்பூச்சிகள்
செல்லரித்துப் போகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திய புருஷனின் மனைவி நீ

சுருண்டு வளைந்த முடியும்
கண்களிலே சோகத்தை
அருவிபோல ஓடவிட்டு
மயானம் நோக்கி வருகிறாளே
ஒருத்தி...
நினைவிருக்கின்றதா உங்களுக்கு,
நல்லவேளை அவள்
பறந்து வந்திருந்தால்
தென்றலே கறுத்துப் போயிருக்கும்

*

சுயம்பரத்தை அவள்
நோக்கி வரவில்லை
பாலகனை இழந்து வருகின்றாள்

யாரவள்?
விசாரிக்கப்பட வேண்டியவளா?
முகவரியைத் தொலைத்து நிற்கும்
கடிதமா?
அந்தப்புரத்திலே அழகு செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தியா?
விண்ணிலே இருந்தாலும்
சமூகத்தால் சபிக்கப்பட்ட நிலவா
இல்லை... இல்லை
அயோத்தி மன்னன் அரிச்சந்திரன்
மனைவியல்லவா?
சூனியத்திற்குள்ளே
சுற்றிக் கொண்டிருந்தவளுக்கு
மயானத்தில் நிற்கும் புலையன்
எப்படி நல்லவனாவான்
உதடுகளைக் கிழித்துக் கொண்டு
வார்த்தைகள்
மெல்ல மெல்ல
ஊர்வலம் வருகின்றன.

*

அவளோ மன்னனின் மனைவி
அவனோ சத்திய புருஷன்
இருவருக்கும் அறிமுகங்கள்
உண்டு...
ஆனால்
தனது தலைவனை புலையன்
என்று
எப்படி நினைப்பாள்
இருவரையும் சந்திக்கவிடாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்வாமித்திரன்...
திரையல்லவா போட்டுவிட்டான்.

*

தனது பாலனை அடக்கம் செய்ய
மயானத்தில் இடம் கேட்டாள்
புனிதமான கர்ப்பப்பைதான்
தேவதாஸனின் கல்லறை...
சுற்று முற்றும் பார்த்த
புலையன் வார்த்தைகளால்
அவளைச் சுட்டெரிக்கின்றான்
முழத்துண்டு கேட்டு
சந்திரமதியை
முழந்தாளிடச் செய்கின்றான்
கூலி கேட்டு அவளை
விரட்டியடிக்கிறான்...

*

நிமிர்ந்து நோக்கிய புலையனின்
கண்களிலே...
கண்ணீர் வந்து ஒட்டிக்கொள்கிறது
பட்டுத்திரைக்கு முடிவாக
இருள்த்திரை விழுகின்றது.
கனவுகள் கற்பனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக்கப் பெருமூச்சுக்களாகி
காற்றிலே கலக்கின்றன.

*

சந்திரமதி!
நீயா
குழம்பிக் கிடந்த
கண்ணீர்க் குளங்களில்
புன்னகைத் தாமரைகள்
பூத்துக் குலுங்குகின்றன.

*

படகு கவிழ்வதைப் போல
எங்கள் வாழ்வு கலைந்து விட்டதே
பனிப்பாறைகளில்
சிக்குண்டு சிதறும் கப்பலைப் போல்
எம்வாழ்வு நொறுங்கிவிட்டதே
மணிமுடிசூடி
நாடாளும் தாங்களா?
சுடலை காக்கும் புலையன்?
சத்தியம் எம்மை
சதி செய்து பிரித்துவிட்டதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேம்புகிறாள் சந்திரமதி
தேற்றுகிறான் அரிச்சந்திரன்.

*

சத்திய புருஷனின் மனைவி நீ...
உதிரத்தாலும், உண்மையாலும்
கட்டி முடித்து வைத்த
வாய்மைக் கோபுரத்தை
நொடிப் பொழுது சுகத்திற்காக
பொடிப் பொடியாய் ஆக்கலாமா
கண்ணே...
நீல விதானத்திலே
நிலைத்திருக்கும் நிலாவை
மரணத்தினால் நொந்துபோன
தேவதாஸனை
அடக்கம் செய்வது
பெற்றோர் கடனல்லவா?

அரிச்சந்திரா...
நீ கலக்கம் கொள்ள வேண்டாம்
பேரின்பப் பேறுகளைப் பெற வேண்டி...
பொய்யொன்று கூறிவிடு

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாமித்திர முனிவரே...
பொய்யான உலகில் வாழும்
பொய்யன் என்று நினைத்தீர்களா?
தர்மதேவதையே, உனக்காக எந்த
சித்திரவதைகளையும்
தாங்கிக் கொள்வேன்
பொய் சொல்ல என்னைத் தூண்டிவிடாதே,
ராஜபோகங்களையும்
மணிமுடியில் ஜொலிக்கும்
மாணிக்கச் சுடர்களையும்
விரும்பும் கோழையல்ல நான்.

*

நெஞ்சினிலே உண்மையின்றி
நினைத்த இடமெல்லாம்
சிறகடித்துச் செல்ல ஆசையில்லை
சத்தியத்திற்காய்...
மரிப்பதைப் பேறாக நினைக்கிறேன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயம்
# மறுமலர்ச்சியான போது...

இலங்கைத் திருநாடு
சமுதாய விழிப்பினைப் பெற்றபோது
அறிவுக்கண்கள் திறக்கப்பட்டன
மக்கள் அனைவரும்...
சுவாசக்காற்றை சுதந்திரமாக்கினார்கள்
இன ஐக்கியத்திற்கான களம்
இலகுவாக உருவாக்கப்பட்டது.
மாற்றானின் அடக்குமுறைகளுக்கு
மக்கள் ஓரணியில்
திரண்டு நின்றார்கள்.

*

சுதந்திரக்காற்று
ஆஸ்துமா வியாதிபோல்
தொண்டைகளை நெருடியபோது
தென்றல் யாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் புயலாக மாறியது...
தேசத்தின் ஒற்றுமை
குழிதோண்டிப் புதைக்கப்பட்டது
சமாதானம் பாடும் வெள்ளைப் புறாக்கள்
ஊமையாகி மௌனித்துவிட்டன.
சோலைகளில் கானமிசைத்த
பூங்குயில்கள்
அவலக் குரல் எழுப்பத் தொடங்கின
கருணை வழியும் தேவாலயங்கள்
அழுகுரல்களின் இருப்பிடமாகியது.
உதிக்க வந்த சூரியனோ
எம்மைவிட்டு விலகி நின்று
வேடிக்கை காட்டினான்
சந்திரனில் ஆய்வு செய்யும்
சிந்தனைகள் பெற்றிருந்தோம்
ஆனால்...
எமது எண்ணங்கள்
வாலறுந்த பட்டமாயின.

சமுதாயச் சந்தையிலே
மானுடத்தின் விலைகள்
பங்குச் சந்தைகள் போல்
வீழ்ச்சி கண்டன.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூபாள ராகம் கேட்டுவிடியும்
பூமித்தாய்...
துப்பாக்கிக் குண்டுகளால்
துடித்துப் போய்விட்டாள்
கள்ளங் கபடமில்லாத வாசலுக்குள்
நாம் நுழைந்துவிடும்
பொழுது எப்போது...
சொல்லம்புகளால்
இதயங்களைப் புண்ணாக்கிய போதும் கூட
கவசங்கள் அணியாமல்
இதயவாசல்களைத் திறந்து வைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானவில்லின் ஜாலத்திலே...

அன்பே
நீ...
வானவில்லைப் பார்த்திருப்பாய்
அங்கே...
ஏழு நிறங்கள் மட்டும்தான்
உன் கண்களுக்குள் தட்டுப்பட்டிருக்கும்
ஆனால்...
என் மனதிலே
ஏராளமான எண்ணங்கள்
அது உன் கண்களுக்கு
அகப்படவில்லையா?...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றைய நாளும் இன்றைய பொழுதும்



நீயும், நானும்
உல்லாசமாய் சிறகடித்த காலம்...
அன்று
நீ என் காதலி
நான் உன் காதலன்
ஆனால்...
இன்றோ
இணைந்து கொள்ள முடியாத
தண்டவாளமாகிவிட்டோம்
அருகருகே பயணித்துக் கொண்டபோதும்
எமது பயணங்கள்
பாதை மாறிய
பயணங்களாகி விட்டன.
காலவோட்டத்தில்
அன்று நான் உன் காதலனாகினேன்.
நீயோ...
இன்று
அண்ணனின் மனைவியாகிவிட்டாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை உய்விக்கும் உத்தமரே ஆசிரியர்

உலகை புதுமை செய்ய
உருவான ஆசிரியரே
நீங்கள் உத்தமர்தான்
ஏனெனில்...
வெறும் கோடுகளையெல்லாம்
கோலமாக்கிடும் நுட்பம்
உங்கள் கைகளில்தான்
என்று
ஊரே உங்கள் வாய்களையே
எதிர்பார்த்துத் தவம் கிடக்கின்றது
உங்கள் கைபட்டதும்
வெறும் கூழாங்கற்களெல்லாம்
பட்டயம் தீட்டப்பட்ட
இரத்தினங்களாய் ஜொலிக்கின்றது
நீங்கள் உத்தமர்தானே - என்று
நினைத்துக் கர்வம் கொள்ளுங்கள்
காலங்களை மாற்றி புதுயுகம் காண
வெகு சீக்கிரமாய்(ப்)
புறப்படுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலைகளாலே வெறும் சேலைகட்டிய
ஓட்டை வீடுகளிலே
முடங்கிக் கிடந்தாலும்
நீங்கள் உத்தமரில்லை என்று
எவருமே
உடன்படிக்கைக்கு வராமல்
அடம்பிடிக்கவில்லை.
நேற்றைகளை நினைத்திருக்கும்
அறிவிலிகள் நிறைந்த
உலகத்திலே
நீங்கள் நாளைகளையே
நினைத்திருப்பீர்கள்
என்பதனை ஊரறியும்
சிலவேளைகளிலே
பலர் ஏற ஏணிகளாகி
உங்களையே நீங்கள்
அழித்துக் கொண்டது
ஏதோ உண்மைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய மறுமலர்ச்சி காண்போம்

இலங்கைத் திருநாடு
சமுதாயத் தனங்களை உருவாக்கும்
களமாக அமைந்த வேளை...
அறிவுக் கண்கள் திறக்கப்பட்டன.
மக்கள் சுவாசக் காற்றை
மனதார அனுபவித்து சுவாசித்தார்கள்.
தமிழரும், முஸ்லீமும், சிங்களவர்களும்
மகாத்மா காந்தி காட்டிய பாதையிலே
பயணம் செய்து கொண்டிருந்தார்கள்.
மாற்றானை விரட்டியடிக்க
மண்ணின் மீது மண்டியிட்டார்கள்.
சுதந்திர மறுமலர்ச்சி
புயலாக மாறிய போது
வெள்ளைப் புறாக்கள் கீதம்பாட மறுத்தன.
சோலைகளில் பாடித்திரியும் குயில்களின்
தொண்டைகளெல்லாம்
வலிமையாக அடைத்துப் போயின.
கருணைவழியும் தேவாலயங்களில்
அழுகுரலும், கண்ணீரும் மீதமாயின...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிக்க வந்த சூரியன்
எம்மை விட்டு ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தது.
சந்திரனிடம் சென்று ஆய்வு செய்ய நினைத்து
சரித்திரம் பல படைக்கத் துணிந்தோம்.
ஆனால்
எமது எண்ணங்களெல்லாம்
உருக்குலைந்து போயின.

சமுதாய முகங்களிலே மலர்ந்த
எழிலை ஒருநொடியில் அழித்துவிட்டோம்
பசுமை நிறைந்த நமது மண்
இரத்தக்களரியாக மாறியது
பூபாளம் கேட்டு விடியும் பொழுது
துப்பாக்கிக் குண்டுகளால் அதிர்ந்து போனது
சமுதாயம் சிதறி சின்னாபின்னமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைப் பெண்ணே! புறப்படு...



பெண்ணே!
உன் அழுத விழிகளே
துயரங்கள் நடமாடும் வீதிகள்
பூக்களுக்குப் பாடம் சொல்லும்
உன் கனவுகளோ
உதிர்ந்து விடும் சருகுகள்
கழுத்திலே தாலி ஏற்றும்
தவத்திற்காய்
இளமையைத் -
தொலைத்துக் கொள்ளும் வேளை
நீ...
காலங்கள் பற்றிக்
கவலை கொள்வதில்லை
மாறாக
விதியை நொந்து கொள்கிறாய்
சமூகச் சந்தையிலே
மௌனமாகி(த்)
தலை வணங்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றலாய் நீ தீண்டாமல்
பூகம்பமாய்(ப்)
புறப்பட்டுச் சென்று
புவியை அடக்க வேண்டும்
ஆணாதிக்கம்
துகள்களாய்ப் போக
புதுமைப் பெண்ணாய்(ப்)
புறப்பட்டுச் செல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாக வருவேன்...



அம்மா...
என்னை நினைத்து
கவலை கொள்ள வேண்டாம்
உன் -
கனவுகள் யாவும்
நிமிடங்களுக்குள்
காற்றாய் கலைந்து போய்விட்டதே
என்று -

*

உன் மகன்
செல்லும் பாதைகள்
கற்களும் முட்களும்
நிறைந்தவைதான்.
ஆனால் -
முட்கள் வந்து பதம்பார்த்த போதும்
நான் கலங்கிப் போகவில்லை
தேசத்தின் விடியல்
கொடிய பாதையில் தான்
தென்படுகின்றது...

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது குடும்ப வறுமையை
நினைக்கும் போது...
உனக்கு ஆத்திரம் வரும்
என்று எனக்குப் புரிகின்றது.
எத்தனை மானுடங்கள்
வறுமைப் புயலினால்
அலக்கழிந்து போகின்றன.
உன் மகனின் புனித(ப்)
பயணத்திற்காய்
இறைவனை மன்றாடு
கால வோட்டத்தில்
புதிய
நூற்றாண்டு தொடங்குகிறது

*

கடந்த நூற்றாண்டு
ஆண்டுகளை நகர்த்தியபோது
சொந்த மண்ணில் விட்டுச் சென்றவை
அழுகைகள்,
இளையர்களின் மரணங்கள்
விதவைக் கோலங்கள்
மௌன அஞ்சலிகள் -
மௌனமான இரங்கல்கள்
கண்ணிழந்த பார்வைகள்

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த
நூற்றாண்டு
கடந்த நூற்றாண்டை
மலர்களால் நினைவு கூரட்டும்
புத்தொளியால்
புனிதப்படுத்தட்டும்

⁂

எம்மிடமிருந்து
காணாமல் போயிருந்த
புன்னகைகள்...
யாரிடமாவது சென்று
இன்பமூட்டியிருந்தால்
மீண்டும் எம்மிடமே
வந்து சேரட்டும்

⁂

துக்கங்களால்
கனத்துப் போயிருந்த
இதயவறைகள்...
மீண்டும் சுருங்கட்டும்.

⁂

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தைக் கண்டு
நான் -
மண்டியிடவில்லை
மாறாக...
கிளர்ந்தெழுகிறேன்
காற்றோடு காற்றாய்
நான் கலந்துவிட்டாலும்
நீ...
கண்கலங்காதே

*

என் மரணம்
புனித மண்ணிலே
தடம் பதித்திருக்கும்
பாதச் சுவடுகளைப்(ப்)
பார்வையிட
முடிந்தால்...
தம்பியையும்
அனுப்பி வை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய தமிழே...

பொதிகை மலைமீதினிலே
சந்தனவாசமாய்(ப்)
புறப்பட்டு வந்தவளே,
உந்தன் -
புகழினை ஏத்துகிறேன்...
அன்புத் தமிழே...
அழகான பூங்கிளியே

*

எதுகை மோனையோடு
துள்ளி விளையாடி வந்தவளே
பாய்ந்துவரும் உன்னழகு கண்டு
பூக்களெல்லாம் பூரிக்கும்
பூவையர்கள் அக மகிழ்வர்;
பொன்னென விளங்கும் ப்ாவையே வாழி...

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலைச் சுவடிகளிலெல்லாம்
ஒய்யாரமாய் அமர்ந்தாய்
மழலைகளின் மொழியிலே
காவியங்கள் தந்தவளே...
அமிழ்திலும் இனியவளே...
முத்தமிழும் காலடியில் முத்தமிடுமே
தென்றலில் கலந்து - நீ
பவனி வருகையிலே
கவிஞரெல்லாம்...
தமை மறந்திடுவர்
உன் நிலை கண்டு

# கருக்கொண்ட போர்மேகம்

கருக்கொண்ட வான்மேகங்கள்
தமக்குள்ளே முட்டிமோதி
மண்ணிற்கு பெருமழை தரவில்லை
யுத்தகால எறிகணைகள்
இரத்தப் புகை கக்கி
தெருவெங்கும் மனிதவுடலங்கள்
பதை பதைத்தோடும் மக்கள் கூட்டம்
தலைகளற்ற பிணமாகி
உருண்டது கண்டும்
இரங்காத போர்வெறியர்,
ஒழிந்து போவதுதான்
எந்நாளோ?
கண்கள் சிந்திடும்
கண்ணீர் மழை கண்டும்
அமைதியுடன்
துடைப்பதற்கு கையில் விரல்கள் இல்லை
மனங்களிலே நம்பிக்கை
நட்சத்திரங்களோ
இன்று வரை தோன்றவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன தாலாட்டு

படுத்துறங்க பாய்களில்லை
பஞ்சணையா இங்கிருக்கும்
நோயும், நொடியும் தேடிவரும்
இடை -இடையே வேட்டோசை
நாடிவரும்
அகதியின் மடியில் உறங்குவதற்கு
நேரமெங்கே...
கொடிய குளிரிலே கண்ணுறங்கவோ
ஏழைத் தாயின் மடிமீது நீ பிறந்தாய்

⁕

பெரிய மரத்தினிலே எந்நாளும் கழியுதடா
பாடையிலே ஏறி பயணம் போகும்
நாள்வரைக்கும்
உன்னை அணைத்து பிரியமுடன் பாலூட்டி
உனக்கு நான் ஏவல் செய்ய
ஓய்வேது கண்ணா...

⁕

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிலே உணவுலொறி தேடி
மரத்தின் கீழே உன்னைப் போட்டுவிட்டு
கல்லான மனதோடு கண்மணியே போய்விடுவேன்
மாலை மயங்கையிலே
உனைத்தேடி நான் வருவேன்
அரைகுறையாய் உணவுதந்து
அப்படியே தூங்க வைப்பேன்.

*

குழந்தையில்லா தாய்மடிகள் - இங்கிருக்க
முத்தாய், பவளமாய், முழுநிலவாய்
அகதி முகாமிலே ஏன் பிறந்தாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறென்ன வேண்டும்

எண்ணங்கள் வான்நோக்கி உயரவேண்டும்
எழுத்தெல்லாம் சுடராகி எரியவேண்டும்
பெண்ணென்றால் தாயென்று பார்க்க வேண்டும்
பெரியோரை அறிகின்ற பெற்றி வேண்டும்
வண்ணங்கள் தெரியாத பார்வை வேண்டும்
வயதுக்குச் சரியான வாழ்க்கை வேண்டும்
தண்ணீரில் சுகங்காணும் ஞானம் வேண்டும்
காமத்தைக் கடந்தேறும் யோகம் வேண்டும்
சொன்னபடி கேட்கின்ற உள்ளம் வேண்டும்
சொன்னால்தான் சாகின்ற தேகம் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரத் தாலாட்டு

சோலைக்குப் பிறந்தவளே
சுத்தமுள்ள தாமரையே
வேலைக்குப் போகின்றேன்
வெண்ணிலவே கண்ணுறங்கு!



அலுவலகம் விட்டு
அம்மா வரும் வரைக்கும்
கேசட்டில் தாலாட்டுக்
கேட்டபடி கண்ணுறங்கு

இருபதாம் நூற்றாண்டில்
என் கருவில் வந்தவளே
இதுதான் கதியென்று
இன்னமுதே கண்ணுறங்கு

தூரத்தில் இருந்தாலும்
தூயவளே! உன் தொட்டில்
ஓரத்தில் என் நினைவு
ஓடிவரும் கண்ணுறங்கு

பேருந்தில் நசுங்கி
பிதுங்குகின்ற வேளையிலும்
எடை கொஞ்சம் இழந்து
இறங்குகின்ற வேளையிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்புக்குள் மூழ்கி
குடியிருக்கும் வேளையிலும்
பூப்பூவாய் உனது முகம்
புறப்பட்டு வரும் கண்ணே

தந்தை வந்து கொஞ்சுவதாய்
தாய் மடியில் தூங்குவதாய்
கண்ணான கண்மணியே
கனவு கண்டு நீயுறங்கு

மாலையிலே ஓடிவந்து
மல்லிகையே உனை அழைத்தால்
சுரக்காத மார்பும்
சுரக்குமடி கண்ணுறங்கு

உறவுக்குத் தடையாக
ஓவென்று அலறாமல்
இரவுக்கு மிச்சம் வைத்து
இப்போது நீயுறங்கு

தாயென்று காட்டுதற்கும்
தழுவி எடுப்பதற்கும்
ஞாயிற்றுக் கிழமை வரும்
நல்லவளே நீயுறங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சொடு புலம்பல்

அமுதம் சுமந்து
வந்தேன் நீயோ
திராவகம் என்மேல் ஊற்றுகிறாய்
இமையே சுமையாய்
ஆனது கண்ணில்
ஏனடி ஊசியை ஏற்றுகிறாய்

இதற்கு முன்னால்
எந்தன் கண்ணில்
இப்படி மின்னல் அடித்ததில்லை
இதற்கு முன்னே
பெண்ணே நெஞ்சம்
இரண்டு மடங்காய்த் துடித்ததில்லை!

ரத்தம் உந்தன்
பேரைச் சொல்லிச்
சத்தம் போடும் வேளையிலே
யுத்தம் ஒன்று
நடக்கும் கண்ணே
மனசுக்குள் ஒரு மூலையிலே.

ஊஞ்சல் தானா
பெண்மை - இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊஞ்சல் கூடத் திரும்பிவரும்
ஊஞ்சல் ஆடும்
பெண்ணே உந்தன்
உள்ளம் என்று விரும்பிவரும்.

உறக்கமில்லை
அன்பே - இந்த
ஊமை வாழ்க்கை பிடிக்கவில்லை.
இறக்கமில்லை.
ஆனால் - எந்தன்
இதயம் ஏனடி துடிக்கவில்லை.

கீதம் உந்தன்
வார்த்தைகள் என்று
கிறுக்கன் போலப் புலம்புகின்றேன்
பாதம் பதிந்த
மண்ணைச் சுற்றிக்
கோயில் ஒன்று எழும்புகின்றேன்.

நெஞ்சைச் சுமக்க
சக்தி இல்லையே
ரெண்டில் ஒன்று சொல்லிவிடு
நெஞ்சில் ஈரம்
இல்லையென்றால்
நீயே வந்து கொள்ளியிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுப் பாலமமைத்து...

முற்காலத்தில் நாம்
முழு நிலவாய் நின்ற
எங்கள் தேசம் பற்றி
மார்தட்டிப் பெருமை கூறினோம்.
ஓடி வரும் மாவலியில்
கைகோர்த்து நீராடினோம்
பச்சை வயவெளிகளில்
பறந்து திரியும் பறவை பற்றி
ஆராய்ச்சி நடாத்தினோம்.

தேசத் தென்றலின்
சுகத்தை இன, மத பேதமின்றி
ஒன்றாய்க் கூடி
அனுபவித்தோம்
சித்திரைப் பிறப்பை
ஒன்றாய் நின்று வரவேற்றோம்
சிங்களக் கன்னியரை
மணமுடித்து
ஒற்றுமை செய்தோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழாலே பெயர் வைத்து
வாழ்ந்திருந்தோம்
வடக்கிற்கும் தெற்கிற்கும்
உறவுப் பாலமைத்து (ப்)
பவனிவந்தோம்.
பரவியிருந்த உறவுகள் பறிபோய்
ஒருவரை ஒருவர்
மங்கிய வெளிச்சத்திலே
மௌனமாகத் தேடுகின்றோம்
இனம் புரியாமல்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊருக்கு மட்டும் சொல்வதற்கு...

ஒரு செய்தி
வைத்திருக்கிறேன்
ஊருக்கு மட்டும்
சொல்வதற்கு
எப்பொழுது
உன்னை நினைத்து
இரத்தப் பச்சை குத்திக்
கொண்டேனோ
அன்று முதல்
என் தவறுக்காய்
அழுது கொண்டிருக்கிறேன்
பல்கலைக் கழகத்தில்
நான் பாடம் நடத்துவேன்
நீ மாணவியாய்
முன்னே அமர்ந்திருப்பாய்
நீ சித்தி பெற்றுவிட்டாய்
பனி மழை நாட்டில்
நீ பவனி வருகிறாய்
இன்றுவரை நான் மட்டும்
பாலைவனத்திலே
அலைந்து கொண்டிருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிவ் இலைகளை
நீ
பரிசீலித்துக் கொண்டிருக்கிறாய்
நான் மட்டும்
கள்ளி முள்ளிலே
பயணித்துக் கொண்டிருக்கிறேன்.
ஒரு செய்தி வைத்திருக்கிறேன்.
உன்னைப்பற்றி
ஊருக்கு மட்டும் சொல்வதற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய அரசியல்



வளர்த்தவர்களே இன்று
வாரிவிடப் படுகின்றார்கள்
கொம்பு சீவியவர்களுக்கே...
கொம்புகள் கிழிக்கின்றன.

பாராளுமன்றச் செங்கோல்
அடிக்கடி
காணாமல் போய்விடுகின்றது.
பேப்பர்களும் பைல்களும்
போராயுதங்களாகின்றன.
நாகரிக அரசியல் மாறி
அநாகரிகம் தலையெடுக்கிறது.
வாய்ப்பந்தல்களும்
வாக்குறுதிகளும்
காற்றாய்(ப்) பறக்கின்றன.
இராமர்களும் இராவணர்களும்
இன்று போய் நாளைவா என
கூறிக் கொண்டிருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜினாமாக்களும்
கட்சித் தாவல்களும்
விறுவிறுப்பாய் அரங்கேறுகின்றன
அடுத்த கூட்டத் தொடரில்
யார் யார் ஆசனம் மாறி
உட்கார்ந்து விடுகின்றார்கள்
என -
மக்களெல்லாம் கழுகுப் பார்வை
பார்க்கிறார்கள்
சாக்கடை வார்த்தைகள்
அடிக்கடி தாராளமாய்
அருச்சுனன் அம்புகளாய்
பறந்து கொண்டிருக்கின்றன.
மக்கள் பற்றிச் சிந்திக்க
இங்கே எவருமில்லை.
இதுவே -
இன்றைய அரசியலாய்
விடிந்து கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகள் யாவும் பழங்கதையாய்

நெஞ்சிலே சில நெருடல்கள்
பாட்டியின் பக்கமாய்
இனிதாக அமர்ந்திருந்து
பழங்கதைகள் கேட்டிருப்போம்.

வில்லுக் குளத்தில் இறங்கி
நீராடிக் குதித்தெழுந்து
ஆட்டங்கள் போட்டு
மீண்டும் நீராடி மகிழ்ந்திருப்போம்.

தென்னை மரமேறி இளநீர் பறித்தெடுத்து
பாங்காக தோழருடன்
பகிர்ந்து உண்டிருப்போம்.
பழங்கதைகள் யாவும் கனவுகளாய்
மறைந்து போய்விடுமோ.

பால்போல் நில வெறிக்க
கோயில் திருவிழாவில்
பாயின்றிப் படுத்திருப்போம்
மீண்டும் கண்விழிக்கும் போது
ஊரே போயிருக்கும்
வெருட்சி தீர்ந்தவுடன்
வீடேறிக் குதித்திருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமரத்துப் பொந்துகளில்
மதி உயர்ந்த கொப்புகளில்
ஆரக்கிளி பிடித்து
தடவி அகமகிழ்வோம்.

உப்பு நீர் தேடி
திரண்டுவரும் கடலலையுள்
பாய்ந்து சென்று நீச்சலடித்து
பரிகாசம் செய்திருப்போம்.

நடுச்சாம வேளையிலும்
வள்ளி திருமண நாட்டுக் கூத்தும்
வட்டமாய் பாய் விரித்து
மகிழ்வுடனே கேட்டிருப்போம்.

நண்பர்களாய்க் கூடி நின்று
ஆடுவெட்டிக் கோழி வெட்டி
கொட்டி வைத்த மணல் வெளியில்
ஒய்யாரமாய் அமர்ந்துண்போம்.
நெஞ்சம் கனக்கிறது
கனவுகளே பழங்கதையாய்
மின்னி வந்து மறைகிறது.
அந்நாளின் வரவிற்காய்
உறுதியுடன் காத்திருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுகளெல்லாம் அழிகிறது

நீதியும் நேர்மையும் நியாயமும் இங்கே
நிழலாகி மண்ணில் மறைகிறது
ஆதிக்க வெறியும் அதிகாரத் தொனியுமே
அகிலமெங்கும் ஒலிக்கிறது.

பிறருக்காய் வாழ்ந்த காலம் போய்
பிறவிகள் எங்கும் சுயநலப் பேய்
கூடியிருந்து சிரிக்கிறது. பின்பு
பாடையோரம் பெருமை பேசித் துடிக்கிறது.

ஆன்றோர் வாக்கும் கருணை மனமும்
ஏய்ப்பவர் வாயில் ஒலிக்கிறது.
பாசாங்கு செய்து அகிம்சைகள் கூறி
அநியாயங்கள் திரை மறைவினிலே நடக்கிறது.

உலகம் திருத்த புறப்பட்ட காலங்கள்
செங்குருதியிலே நனைகிறது.
உழைப்பின் மகிமை உணரும் முன்னே
உணர்வுகளெல்லாம் அழிகிறது.

நல்லோர் வாழாக்காலம் மாறி
கொடியவர் காலம் நடக்கிறது
பொய்மை பேசி அழிப்பவர்காலம்
மின்னல் போல வளர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ சொர்க்கத்தில் இருக்கிறாய்

பூவாய்ப் பிறந்தாய் ரமேஷ்
கொடியவர்கள் உன்னை
முள்ளாக்கி விட்டார்கள்

உன்னிலே
அத்துமீறிக் குடியேறிய கலைகளை
தொலைத்து விட்டாயே.

உந்தன்
குழந்தை மொழியை
கொடிய பகைவர்கள்
செவி சாய்க்காமலே
துப்பாக்கியின் பாஷையிலே
பேசிவிட்டார்களே

நீ கலைகள் பயின்று
மற்றோரைச் சிரிக்க வைத்தது
பாரிய குற்றங்களா?

இதுவே தண்டனையென்றால் -
பாவங்களையெல்லாம்
எவற்றிலே அடக்குவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ சொர்க்கத்தில் இருக்கிறாய்
அகமகிழ்ந்தபடியே
தப்பில்லை -

உன்னை இழந்தவர்களுக்கு
ஆறுதல் எங்கே?
விடை தெரியாமல்
தேடிக் கொண்டிருக்கிறோம்.
நீ இம்மண்ணில்
மீண்டும் பிறக்கும் வரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணாதிக்கக் கணைகளினால்...

மங்கையரின் கனவினிலே
மலர் மாலைகள்
உதிர்ந்து போகின்றன
சீதனச் சந்தையிலே..
பேசப்படும் பொருளாக
விலை போகின்றன.
வீட்டில் வைக்கப்படும்
தலையாட்டிப் பொம்மைகள் மீது
சில வேளைகளில்
ஆச்சரியக் குற்றச்சாட்டுகள்
ஆணாதிக்கக் கணைகளினால்
அள்ளி வீசப்படுவதுண்டு
குற்றச்சாட்டின்
பின்புறத்தே
நாற்காலி போட்டு அமர்ந்துள்ளது.

வரதட்சணை
நீங்கள் கொடுப்பதைக்
கொடுங்கள் என்று
குளிர்ச்சியான பேச்சு
இடையிடையே ஒலிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கமாக வளர்த்த
பெண்களிடமே
தங்க நகை கேட்டுத்
தண்டனைகள்
அடிக்கடி அரங்கேறும்.
இல்லையெனில் -
தீக்குளிப்புகளும்
அலரி விதைகளும்

பெண்ணின் பொறுப்பை
கழற்றி விட்டதாக
பெற்றோர் நினைக்கிறார்கள்
இன்னலுக்குள் விழுந்த மகள்
எங்கோ தொலைதூரம்
போகத் தயாராவதை அறியாமலே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிக் காலம்

வேட்டோசை கேட்டு
விடிகிறது காலை -
செய்தி சேகரித்தவர்கள்
அன்று மாலையே -
தலைப்புச் செய்தியாகிறார்கள்
அமைதி வந்ததை எண்ணி
யுத்த விளக்கை ஏற்றவும் முடியாமல்
யுத்த விளக்கை அணைக்கவும் முடியாமல்
மானுடம் திண்டாடுகிறது.
விளம்பரப் படங்களில் கூட
தமிழர் கண்கள்
தோண்டப்படுகின்றன....
உண்மையில்
அமைதிக் காலம் அமைதியைத்
தரவில்லை.........
அழுகுரலையும் கண்ணீரையும்
தேடித்தந்தது......
மரண முட்களிலே
குருதிப் பூக்கள்
மலர்ந்துள்ளன.
சுதந்திர வார்த்தைகள்
திருட்டுப் போகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லறைகளுக்கு மேலே
சுதந்திரக் கொடிகள்
பறப்பது கண்டு
தேசிய கீதம்
இசைக்கப் படுகின்றது.
அமைதிக்காலம்
வெள்ளை ஒளியிழந்து
கறுப் பொளியிலே
அடங்கிப் போகிறது.
இதையே
சமாதானத்தின் வெற்றியாக
அரசியல் உலகம்
மார்பு தட்டிப் பறைசாற்றுகின்றது.
அமைதிக் காலம்
உண்மையாக அமைதியை(த்)
தரவில்லை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதையானது...

ஆத்மாக்களின் சத்தம்
மனிதனின் மாற்றுச் சுவாசம்
இதயம் சொல்லும்
இன்னுமொரு ராகம்
மகாவலி போலக்
கட்டாயப் பயணம்
சிரிப்பும் கண்ணீரும் போல
உயிரில் உண்டாகும் அவஸ்தை
நிதர்சனங்களின் கண்ணாடி....
பறவைகளின் தாகத்திற்காய்
உருகும் பனிப்பாறை
எண்ண மெல்லாம்
சிறகடிக்கச் செய்யும்
தூய்மையான ஆகாயம்
கவிதை ஆலம் விழுதுகள் போல்
கவிஞனின் ஆசையின் படி
மொழி தெரியாதவர்களின்
பரிபாஷைகள்.....
கவிதை சிற்பமல்ல
செதுக்கிப் பார்ப்பதற்கு
அது பூவைப் போல்
இதயக்கமலத்தில் விரிவது.
மனிதர்களின் விழியைத் திறந்து
இதய ஜன்னல்களைத் திறந்து -
வாசல்களில் உலாவருவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதயச் சாம்ராஜ்ஜியத்தில்...

வசந்த காலம் போல்
என் வாழ்க்கையை
ஆரம்பிக்க நினைத்தேன்
இலையுதிர்ந்த மரமாய்
என் வாழ்வு
தொங்கிக் கொண்டிருக்கிறது
ஒரு சில வருடங்களாய்
நிழல் வாகை மரத்தடியில்
மரணத்திற்காய்
காத்திருக்கின்றேன்.
முன்னர் போல்
என் இதயச் சாம்ராஜ்ஜியத்தில்
சிந்தனைகள்
சிறகடிப்பதில்லை -
இதயக் கதவுகள்
நிரந்தரமாய்
மூடிக் கொண்டு விட்டன.
இதயக் கீறல்கள்
ரணங்களாய்
இப்பொழுது வலியெடுப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிய வாய்களெல்லாம்
என் செவிகளில் படுவதில்லை.
பழைய சோகங்களை
புதிய சோகங்கள்
முழுமையாய்
விழுங்கி விட்டன.
நடந்து திரிந்த பாதைகள்
மறந்து போய்விட்டன.
என் நினைவில் வாழ்பவர்களை
ஓரமாக ஒதுக்கி
வைத்து விட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிசப்த அக்கினியில்...

அன்றைய அமைதி
திருமலையில் இல்லை
அமைதி காப்பவர்கள்
அட்டகாசம் புரிகின்றனர்
அகிம்சைக்கு இப்பொழுது
நெருப்பு மூட்டப்பட்டுள்ளது.
நிசப்தம் அக்கினியில்
எரிந்து கொண்டிருக்கின்றது.
போதி மாதவனும்
பொல்லாதவனாகி விட்டான்
இராணுவ அரணுக்குள்
பாதுகாப்புத் தேடி
பாதிமுகம் தெரிய
மறைந்து விட்டான்
கத்திகளும் பொல்லுகளும்
எதிரிகளின் ஏற்பாட்டில்
மண்டைகள் பிளக்கும்
ஒரு மௌனக் கலப்பில்
அமர்க்களமாய் திருமலை
அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன் வெட்டுகளாய்
மனிதம் அறுக்கப்படுகின்றது
தொடரும் அவலங்களாய்
துயரங்களே அட்சய பாத்திரங்கள்.
மதம் போதிப்பவர்களே
இரத்தத்தின் வடிகாலாய்ப்
போகின்ற கொடுமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரம்

அதிகார அச்சில்
சுழன்று கொண்டிருக்கிறது பூமி
அச்சை நோக்கி நகர்கிறது
வாழ்க்கை
அதை தக்க வைக்க
முண்டியடிக்கும் மனிதகூட்டம் என
விரிகிறது யுகம்...
அதிகாரத்தை எதிர்த்து
மேடைப்பேச்சுப் போராட்டம்
அரச இயந்திரத்தைப் பிடிக்க
கிளர்ச்சியென
அசைகிறது வாழ்க்கை

அதிகார எதிர்க்குரலாளர்
அதிகார வர்க்கத்தினர்
இசைபற்றிப் பேசும்
செவிடர்களைப் போல்
விழிப்புணர்வு பேசுவோருக்கு
விழிப்புணர்வு இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றுக் குழைக்கும்
சோற்றில் இருந்து
வரம்பு மீறிய வாழ்க்கை வரை
அதிகாரத்தின் ஆக்கிரமிப்பு

அதிகார அச்சில்
சுற்றிக் கொண்டிருக்கிறது பூமி
அச்சை நோக்கி நகர்கிறது
வாழ்க்கை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புள்ளியில் புதைந்த உறவு...

ஒரு புள்ளியில் தொடங்கி
ஒவ்வொரு முறையும்
அண்டம் என விரியும்
என் நினைவுகள்

என் இளமைத் தோப்பிற்கு
கல்லெறிந்து போன
அவள் ஞாபகம் எப்போதும்
ஒரு புள்ளியில் தொடங்கி
விரிகிறது.

அக்கினி ஆறுகளைக் கடந்து
என் முகத்தில் தெறித்த பனித்துளி
இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கிறது.
காளிக் கோவில் திருவிழா
நிழல் வாகை மரத்தடி
பேசா மொழிகள்
இவற்றை இன்றுவரை
அர்த்தப்படுத்த முடியவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசாமல் போகும்
கண்களும் இதழ்களும்
எதைப் பற்றிப் பேசியிருக்கும்...

காலவோட்டத்தில்
திருவிழாவில் அவள்
கைக்குழந்தையோடு நின்ற போது...
சூனியப் பார்வை உதிர்கிறது.
இது காதலா அனுதாபமா.
இன்று வரை புரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம படைப்பு

மேடும் பள்ளமும்
பசியும் பாவமுமாக
விரிந்து நிற்கிறது வாழ்வு
மலையகத்தில் நீர்வீழ்ச்சிகள்
நிறைந்து சிறக்கிறது ஒருபக்கம்
பாலைவனம் பெருகி
அனல் பறக்கிறது ஒரு பக்கம்
இதைக் கடவுளின்
சமபடைப்பு என்று
மார்புதட்டிக் கொள்கிறான்
மனிதன்.

பணம் என்னும் பெருமை
பசி என்னும் துயரம்
பொறாமை வெறுப்பு
இவையெல்லாம்
மனிதனை எச்சரிக்கின்றன.
மேல் வர்க்கக்காரன்
பசிக்க மாத்திரை தேடுகிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளத்தில் இருப்பவன்
பட்டினியால் யாத்திரை
செய்கின்றான்
இருப்பவனுக்கு இன்னும் சேர்க்கும் ஏக்கம்
ஏழைக்கோ இல்லை என்ற ஏக்கம்
இதுதான் கடவுளின்
சமபடைப்பு என்று மார்பு
தட்டுகின்றான் மனிதன்
கடவுளுக்கே சமாந்தரம்
இல்லாத போது
குன்றும் குழியும் நிறைந்த
சமமற்ற வாழ்வை
யாரிடம் பெறுவது
கடவுளின் படைப்புச் சமம்
என்று நாமும் மார்பு தட்டுவதைத்
தவிர.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுமொரு உறவுக்காய்...

என்
ஆத்மா இப்பொழுது
ஓர் அகதிக் கூடாரத்தினுள்
அடக்கப்பட்டிருக்கின்றது
என் உறவுகளை
உறிஞ்சிக் குடித்துவிட்டு
ஒய்யாரமாக அமர்ந்திருக்கின்றது
பேரினவாதம்.

என் நிலங்கள்
அபகரிக்கப்பட்டு
எனக்குரிய வாழ்வு
அன்னியப்படுத்தப்பட்டுள்ளது
அகதி முகாம் சுவர்களிலே
நான்
அறையப்பட்டிருக்கின்றேன்
என்
உடையைப்பற்றும் குழந்தை
உயிரான மனைவி என்று
நீண்ட உறவுப்பட்டியலை
குண்டு மழை பொழிந்து
தன் கோரப் பற்களை நீட்டி
அழித்து ஏப்பம் விட்டபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இரை தேடுகிறது
இனவாதம்.

என் பிள்ளை கால் பதித்த
முற்றம்
முப்பாட்டன் வாழ்ந்த வீடு
உறவு வளர்த்த வேப்பமரம்
முற்றத்து ஒற்றைப்பனை
எல்லாம் என் நினைவுகளில்
எப்பொழுதும் நான்
கால் பதிக்க முடியாதபடி
முள்வேலிகள்.

பசும்புல்லில்
பரந்து விரிந்த என் வாழ்வு
அந்நியனின் கோரப்பிடியில்
சிறைப்பட்டுப் போனது இன்று
ஒரு கூடாரத்திற்குள்
என் உணர்வுகள்
முடங்கிப் போய்
குருட்டு விளக்குடன்
நான்
இன்னுமொரு விடியலுக்காய்
அகதிமுகாமின் சுவரில்
நான்
அறையப் பட்டிருக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலே நீயேன்...

முத்தும், சிப்பியுமாய்
சமுத்திரப் பூக்கள் தந்தாய்
பண்ணிசைக்கும் கடலே
அடங்கிய பொறுமை
பொங்கினால் புயலென்பர்
அலையோசை இசைவடிவாய்
தென்றலெல்லாம் தாலாட்டாய்
இன்னிசை தந்த கடலே!
அப்பாவி மக்களின்
கண்ணீர்த் துளிகளை
உப்பு நீரோடு
ஏன் கரைத்துக்கொண்டாய்

மாவலியும் களனியும்
சந்தனமும் சாம்பிராணியும்
சிந்திய வாசனை போய்
பிணவாடையும்
மனித உடலங்களையும்
அள்ளிக் குவித்தது ஏனோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழி இருபத்தாறு
வடகிழக்கில் தந்த சோகங்கள்
மாறா வடுக்களாக
உள்ளங்களில்...
ஏக்கங்களைத் தந்துவிட்டன.

முகவரி தெரியா தாய்மையும்
பால் மணப் பச்சைப் பாலகரும்
தெருவெங்கும் சிதறுண்டனர்
போரினால் தவிக்கும்
எம்மக்களிடம்
சொல்லவும் முடியாமல்
மெல்லவும் முடியாமல்
துடிப்பவர்களிடத்தே
இழப்புகளைச் சொல்லாமல்
தந்து விட்டாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனே சிந்தித்துக் கொள்...

உன் சிந்தனையை
ஒரு தடவை புதுப்பித்துக் கொள்
நிலையற்ற உலகிலே
நித்தமும் நிம்மதியை(த்)
தேடி அலையாதே.

வாழ்க்கையின் பலம்
நம்பிக்கை தானே
சந்தோஷம் என்பது
தோண்டி எடுப்பதல்ல
உருவாக்கிக் கொள்வது.

இழந்ததை நினைத்து
இருப்பதைக் கெடுத்துவிடாதே
சந்தர்ப்பம் கிடைப்பவன்
அயோக்கியன் என்றும்
சந்தர்ப்பம் கிடையாதவன்
யோக்கியன் என்பதையும்
மனதிலே நிறுத்திக் கொள்.

உன் இதயத்துள் நடக்கும்
மௌனப் போராட்டத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி கலைத்துக் கொள்
சந்தோஷமாய் வாழ்ந்து
மற்றவரையும் சந்தோஷப்படுத்து.

வாழ்வின் துன்பமே
வாழ்வை இனிக்க வைக்கும்
மரணத்தைக் கண்டு கலங்கிவிடாதே,
மரணம் என்பது
சுகமான தூக்கம்.

சாதிக்க நினைத்துக் கொள்
அது முடியாவிட்டால்
மண்ணில் வாழ்ந்துவிட்டுப் போ...
தமிழையும் தாயையும்
மறந்து விட்டுப் போய்விடாதே.
அவை உன்னை மறந்துவிடும்.

விதியின் பார்வையில்
விழியில்லா சித்திரமாய்
விருப்போடு விடியலைத் தேடு
விடியல் என்பது
முழுநிலவாய்த் தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுட இயந்திரங்கள்

தேயிலைத் தேசத்தின்
மானுட இயந்திரங்கள்
தமது இரத்தத்தையே
கலவை செய்து
தேநீர் தருகின்றன.
வளம் கொழிக்கும் மலையகம்
வளர்த்துவிட்ட இவர்களுக்கு
கண்ணீரைப் பரிசு கொடுக்கிறது.
அட்டைக் கடியும்
அரை வேக்காடும்
கொட்டும் இடியோசையும்
தேவை நிறைக்கவில்லை
முதுகில் ஏறி சவாரி செய்யும்
மூடர்களின் பேச்சை நம்பி
வாழ்வைத் தொலைத்தவர்கள்
கவ்வாத்துக் கத்திகளோடு
களை யெடுப்பார்கள்...
முழுமையாகக் களைகள்
அகலும் வரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம் கொத்தியொன்று...

தேசப் படத்திலே
எங்கள் தேசத்தை(த்)
தேடிக் கொண்டிருக்கிறேன்.
குளக்கோட்டன் கட்டிய
குளங்களெல்லாம்
பாடமாற்றம் பெற்றுவிட்டன.
புண்ணிய எங்கள் தேசத்திலே
ஊர்களின் பெயர்களிலே
பல்லவியைப் பறிகொடுத்து
புரக்களும், கமக்களும்
ஒட்டிவிட்டன.
கலைபடைக்க வந்தவர்கள்
கலைக்கப் பட்டார்கள்
தத்துவங்கள் சொன்னவர்கள்
தலைகளற்ற முண்ட மானார்கள்
தட்டிக் கேட்டவர்கள்
தண்டனை பெற்றார்கள்
காலத்தின் ஏடுகளைப் புரட்டும் போது
மரம் கொத்தி ஒன்று
மண்டையை கொத்திக் குடைகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் என்னும் சொல் தவிர
மற்றவையெல்லாம்
பழங்கதையாய்
வழக்கொழிந்து போய்விட்டன
புதிய சரித்திரம் தோன்றும்வரை
மௌனித்து(க்)
காத்திருப்போம்.
வீர யுக வரவிற்காய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்ந்த மலர்கள்

சம்பூர் மண் - இன்று
மகுடம் சூடிவிட்டது
வரவேற்பு பாவடித்து
வாழ்த்துப்பா பாடுகின்றது.

என்றும் மணம்வீசும்
வீரகாவியம் பாடுகின்றது
பச்சை வயல்வெளிகள்
பாவிசைக்கும் பசும் கிளிகள்
இச்சை கொள்ளும் வில்லேரி
சுற்றியோடும் கடலலைகள்
இதயமெல்லாம்
பச்சை குத்திக் கொள்ளும்.

தென்னைகள் தலையசைக்கும்
பூவரசம் வேலியிலே
புல்லாங்குழல் இசைபிறக்கும்
கயல் மீன்கள் துள்ளியெழும்
சின்னத் தெருக்களெல்லாம்
பள்ளிவிட்ட சிறார்கள்
எண்ணித் தினம் மகிழ்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முழுநிலவில்
வெள்ளைக் கடலோரம்
பேசித் தினம் களிப்போம்.

மீண்டும் எம் ஊரில்
உரிமையோடு வாழவே
சூரிய உதயத்தைத் தேடுகின்றோம்.
கொடிய இரவுகள்
வெளிச்சத்தைத் தேடுகின்றன.
விடிவு வரும் நாளை
நோக்கிய படியே...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர யுகம்...

அன்று அச்சாணியாய்
நின்று நிலைத்தவர்கள்
உழைத்துக் களைத்தவர்கள்
எலும்புந் தோலுமாய்
சுவரோரத்தில்
முடங்கிக் கிடக்கிறார்கள்
அங்கே ஒரு மகள்
அழுகின்றாள்
காலையில் எழுந்து
அவசர அவசரமாய்(ப்)
பஸ் பிடித்துப்
பாடசாலை செல்ல வேண்டும்.
முதியோரைக் கவனிப்பதா
பாலுக்காய் அழும் குழந்தையை
தாலாட்டுவதா?
காலையின் அவசரம்
கடிகாரத்தின் முட்களின் நகர்ச்சி
நிசப்தமாய் அவளால்
நேசிக்க முடியவில்லை.
வேலைக்குப் புறப்பட
ஆயத்தமாகும் அவசரத்தில்
பால் கூட உறைந்து விடுகிறது.
முதியோரிடம் குழந்தையிடம்
காட்டும் அன்பை
புறந்தள்ளிய படியே
வாழ்க்கை நகர்கின்றது
காரணம் -
அவசரயுகம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி தேவதையே மௌனமேன்...

நீதி தேவதையே
உன் குரல் கேட்டுத்
திரும்பிப் பார்த்தேன்
பாலைவனத்து
காணல்போல் - நீ
நின்றாய் -
கொலை செய்தவர்கள்
மரண தண்டனைகள்
பெற்றவர்கள்
சுதந்திரமாய்
விடுதலையாவது கண்டு
உன் குரல் அடைத்துவிட்டதா?
எரிமலையாய்...
உன் உணர்வுகளை யெல்லாம்
ஓரம் கட்டிவிட்டாயா?
எங்கள் இதய அறைகளை
உந்தன்
உதிராத புன்னகைகள்
காயப்படுத்திவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பாற்றில்
மானுடம் -
நீந்திக் கொண்டிருக்கிறது.
வதை முகாங்களில்
வருடா வருடங்கள்
மானுடத்தின் அலறல்கள் -
மலைகளில் மோதி
அப்படியே அடங்கிப் போகிறது.
எலும்புக் கூடுகள் மாத்திரம்
அடையாளம் தெரியாமல்
அப்படியே -
உளுத்துப் போகின்றன.
உறவுகளின் கண்ணீர் மட்டும்
நித்தம் நித்தம்
மண்ணின் புழுதியினை
ஈரப்படுத்திக் கொண்டிருக்கும்
நீதி தேவதையே...
மௌனம் கலையும்
காலம் எப்போது வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவன் ஏழைச்சிறுவன்...

அவன் ஏழைச்
சிறுவன்
காலம் அவனை அப்படியே
படைத்துவிட்டது
போகும் பாதை எங்கும்
கழுகுகள் அவனைக்
கொத்துகின்றன.
காகங்கள் இடைவிடாது
கொத்துகின்றன
தன் கைகளைக் கொண்டு
உடல் மூடுகின்றான்
மீண்டும் கொத்தல்கள்
இரத்தக் கீறல்கள்
அவன் உடைகள்
கந்தலாகின்றன -
தீட்டிய போர்வாள் போல்
அவன் சிந்தனைகள்
கிளைத் தெழுகின்றன
ஒரு முடிவிற்கு வருகின்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைக் காயப்படுத்த
வருவனவற்றை
விரட்டியடிக்க(த்)
திட்டம் தீட்டுகின்றான்
தனது கைகளை
மெதுவாக உயர்த்துகின்றான்
கழுகுகளும் - காகங்களும்
தலைகால் புரியாமல்
பறந்து மறைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராத எண்ணங்கள்

அன்பே
நீ வானத்திலே
வானவில்லை(ப்)
பார்த்திருப்பாய்
அங்கு -
உன் கண்களுக்கு
ஏழு நிறங்கள் மாத்திரம் தான்
தெரிந்திடும்
ஆனால் -
என் நெஞ்சிலே
ஏராளமான எண்ணங்கள்
அடிக்கடி வந்து
அலைமோதிச் செல்வது
உனக்குத் தெரியவில்லையா?
காற்றிலே வந்து
கவிதை சொல்வேன்
அது உனக்குத்
தெரியாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்புச் சீதைகள்

ஆறுகளில் குளித்து
பெரியமரம் பின் மறைந்து
மாராப்பு உடையணிந்து
மார்கழிக் குளிருக்காய்
கனவில் கன்னம் தேய்த்த
கதகதப் பெல்லாம்
ஒரு நொடியில்
பறந்து போனது -
கணவன் என்ற பெயரில்
தள்ளிவிட்டார்கள் -
இராமனுக்காய் - அன்று
தீக்குளித்தாள் சீதை
இன்றைய இராமர்களுக்காய்
நெருப்பாற்றில் - இன்று
தீக்குளித்துக் கொண்டிருக்கிறேன்.
கொட்டை எழுத்துக்களால்
தலைப்புச் செய்தியாக
நகரமெங்கும் - நான்
பேசப்படுவேன் - என்பது
உறுதியாகிவிட்டது உண்மை -
ஆனால்
மறு ஜென்மத்திலாவது
நவீன இராமர்களை
தீக்குளிக்கச் செய்வேன்.
நான் மட்டும்
தீக்குளிக்காமல்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் உதிர்ந்து போன சருகுகளாய்



சிற்றிடை காட்டிவரும்
சிங்காரியாக இருந்தாலும்
கல்யாணச் சந்தையிலே
மணமகனுக்காக(க்)
மாப்புள்ளி வைத்த கோலங்கள்
கழுத்திலே
தாலியேற்றும் தவத்திற்காய்
இளமையைத் தொலைத்தவர்கள்
காலம்பற்றி இவர்களுக்குக்
கவலை கிடையாது
காரணம் -
காலங்கள் இளமையை(ப்)
பறித்துவிட்டன.
பூ மலர்ந்தது போல்
பெருமிதம் கொண்டவர்கள்
இன்று
உதிர்ந்து போன சருகுகளாய்.

A. KUGAN
7R. 2nd LANE
ANANDAPURI
TRINCO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13/1/05 / 14/1/05

Tel 0779189005

பத்தினியன் [illegible]

கிழக்குப் பல்கலைக்கழகம்

(கல்லடி)

B.A - தமிழ் (சிறப்பு)

3ம் வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாசிரியரைப் பற்றி...



கனக. யோகானந்தன்

சம்பூர் மண் இன்று மகுடம் சூடி விட்டது வரவேற்பு பா வடித்து வாழ்த்துப் பா பாடுகின்றது.

மீண்டும் எம் ஊரில் உரிமையோடு வாழவே சூரிய உதயத்தைத் தேடுகின்றோம்.

இந்த வரிகளை இப்படி அழகாகச் சொல்ல அந்த ஊரின் சொந்த மைந்தனால் தான் முடியும். மண் வாசத்தையும், பற்றையும் மனதில் புதைத்து வைத்துக்கொண்டு உயிரான கவிதைகளை வடித்திருக்கும் இந் நூலாசிரியர் கனகசூரியம் யோகானந்தன் அவர்கள் போற்றுதலுக்கும், நேசித்தலுக்கும் உரித்தாகின்றார்.

கொட்டியாரபுரத்தின் (மூதூர்) பழமைமிகு பெருமை கொண்ட சம்பூர் அவர் பிறப்பிடம். இயல்பாகவே புலமைமிகுந்த அக் கிராமத்தில் இவர் கவிஞர் ஆனதில் புதுமை ஏதும் இல்லை. ஆனால் நாட்டின் வன்முறை உச்சமாகப் பாதித்த காலங்களில் கல்வியைக் கைவிடாததோடு கவிதையிலும் உச்சமாக வளர்ந்திருந்ததுதான் வியப்பு.

பட்டதாரியான இவர் சம காலத்தில் இந்த இலக்கியப் படைப்பாளிகளுக்குள் தன்னையும் அடையாளம் காட்டி நிற்பது அவரது அயராத முயற்சியைக் காட்டுகின்றது. கடமை உணர்வு கொண்ட அதிபராகவும், சிறந்த கவிஞராகவும் திகழ்வதற்கு அவரின் தூய்மையான மனப்போக்கே காரணமெனலாம்.

இத் திறமைகள் மெச்சப்பட வேண்டியது.

வாழ்வியல் யதார்த்தங்களைக் கூறும் ‘உண்மை என்றும் உயிர் பெறும்’ உங்கள் கரங்களில் தவழ்கிறது. மேலும் பல படைப்புகள் வர ஆதரவு நல்கி உற்சாகப்படுத்துவோம்.

தொடர்ந்து இவர் சிறக்க நெஞ்சார வாழ்த்துவோம்.

**கனகசபை தேவகடாட்சம்**

மல்லிகைத் தீவு

கொட்டியாபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org